**செய்தி வெளியீடு எண்: 207** **நாள்: 12.03.2020**

**மாநிலத் திட்டக்குழு**

மாநிலத் திட்டக்குழு தமிழ்நாட்டில், 1971 ஆம் ஆண்டு மே திங்கள் 25ஆம் நாள் மாண்புமிகு முதலமைச்சா் அவா்களின் தலைமையின் கீழ் ஓர் ஆலோசனை அமைப்பாக ஏற்படுத்தப்பட்டு, மாநிலத்தின் வளா்ச்சி குறித்த பல்வேறு செயல்பாடுகளில் தனது பரிந்துரைகளை அரசுக்கு அளித்து வருகிறது.

மாநில திட்டக் குழுவின் துணைத்தலைவராக திரு. சி. பொன்னையன், அரசு ஆணை எண்.13, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (மாதிகு) துறை, நாள் 09.03.2020– இன் படி நியமனம் செய்யப்பட்டு இன்று (12.3.2020) மாண்புமிகு தமிழக முதலமைச்சர், மாண்புமிகு தமிழக துணைமுதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் பதவி ஏற்றுக்கொண்டார். அரசு ஆணை எண்.15, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (மாதிகு) துறை, நாள் 12.03.2020– இன்படி **இப்பதவி அமைச்சர் பதவிக்கு இணையானது.**

அரசு கூடுதல் தலைமைச் செயலா், திட்டம், வளா்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் அரசு கூடுதல் தலைமைச் செயலா், நிதித்துறை ஆகியோர் இக்குழுவின் அலுவல்சாா் உறுப்பினா்களாவா். மாநிலத் திட்டக்குழுவின் உறுப்பினா் செயலா் இக்குழுவின் நிருவாகப் பொறுப்பு வகிக்கிறாா். மாநில திட்டக்குழுவின் நிருவாக கட்டுப்பாடு துறையாக திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை செயல்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**